1990 மார்ச் 22]

திரு. ஆர். மூக்கன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்ட மதிப்பீடு எவ்வளவு ? எப்போது இதன் மூலம் பயன் அடைய முடியும்? எவ்வளவு மக்கள் இதனால் பயன் பெறுவார்கள் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்ட மதிப்பீடு ரூ. 1,064.50 லட்சமாக இப்போது மதிப்பிடப்பட்டு அரசினுடைய பார்வைக்கு வந்திருக்கிறது. இதன் மூலமாக ஏறத்தாழ 94 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுமார் 3 இலட்சம் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே இத் திட்டம் செயல்பட இருக்கிறது. இதற்காக நபர் ஒருவருக்கு ஆகின்ற செலவு ரூ. 481 ஆகக் கணக்கிடப்பட்டு உள்ளது. இந்தத் திட்டம் இப்போது குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசினுடைய பார்வைக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு இந்தத் திட்டம் செயல்படத் துவங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களில் குழந்தை மற்றும் மகளிர் மருத்துவமனைகள்

***6742 டாக்டர் எம். மோசஸ் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

எல்லா மாவட்டங்களிலும் குழந்தை மற்றும் மகளிர் மருத்துவமனைகளைத் தனியே நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

இல்லை.

9-55 மணி

டாக்டர் எம். மோசஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் '' இல்லை '' என்று ஒரே வரியில் பதில் சொல்லிவிட்டார்கள். ஆனால் இது மிகவும் முக்கியமான தேவை என்பதை அரசு உணருமா என் பதைத் தங்கள் மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட மருத்துவமனைகளில் இதற்காகத் தனித்தனி பிரிவுகளாக குழந்தை மற்றும் மகளிர் மருத்துவமனைகள் ஒவ்வொரு மாவட்ட மருத்துவ

மனையிலும் செயல்படுகின்றன. இவற்றைத் தனியான மருத்துவ மனைகளாக நிறுவ முடியுமா என்பதற்கு நிதி வசதிக்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று தான் நான் சொல்லி இருக்கிறேன். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற மருத்துவ மனைகளில் இதற்கான தனிப்பிரிவுகள் துவக்கப்பட்டு, அதற்காக தனியாக மருத்துவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எம். மோசஸ் : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மிகவும் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று நாம் எல்லோரும் ஒரே கருத்துள்ளவர்களாக இருக்கிறோம். அப்படி இருக்கிற சமயத்திலே ஒரு தாய், சுகமாகக் குழந்தை பெறுவாள் என்பது, நல்ல மருத்துவமனையில் தனக்கு சிகிச்சை கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்தால் தான், அப்போதுதான் குடும்பநலத் திட்டமும் முன்னேறும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, தனியாக குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்சிலும் தனி ஆஸ்பத்திரிகள் நிறுவ அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை).

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் கவர்ன்மென்ட் ராஜாஜி ஆஸ்பிட்டல் இருக்கிறது. அதில் குழந்தைகள் நல வார்டுக்கு நானே சென்று பார்த்தேன். மிக மிக வசதிக் குறைவாக அந்த வார்டுகளில், இடப் பற்றாக் குறை, கருவிகள் பற்றாக்குறை, மருந்து பற்றாக்குறை இருந்தன. டாக்டர்கள் பற்றாக்குறை இல்லாவிட்டாலும், இந்த பற்றாக் குறைகள் இருக்கின்றன. முதியவர்களுக்கு வைத்தியம் செய்வதை விட குழந்தைகளுக்கு வைத்தியம் செய்வது மிகவும் முக்கியம் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டு, அதற்காக தனிக் கட்டிடம் அதற்கு தனிப்பட்ட அக்கறையை இந்த அரசு செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கேள்விக்கு சம்பந்தம் இல்லாத வினாவாக இருந்தாலும், இது குறித்து தனியாகக் கொடுத்தால் அரசின் நிதிநிலைமைக் கேற்ப அரசு பரிசீலிக்கும்.

மேச்சேரி ஆடுகள் இனவிருத்தி

*3787—திரு. கே. அர்ஜுனன் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மேச்சேரி ஆடுகளின் இன விருத்திக்கு அரசு எடுத்து உள்ள நடவடிக்கை என்ன ?